2. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

(அ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்;

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன் தேவை. இன்றைக்கு 4, 5 சட்டங்கள் இன்ட்ரடியூஸ் செய்வதற்கு தாங்கள் அனுமதித்து இருக்கிறீர்கள். அது எப்போது விவாதத்திற்கு வருகிறது; இன்றைக்கே விவாதத் திற்கு வருகிறதா? How it is possible?

மாண்புமிகு பேரவைத் தலைவர்; Time இருந்தால் இன்றைக்கு evening; இல்லையென்றால் நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கு. ரமணி; அப்படியும்கூட சாத்தியம் இல்லையே. ஒரு சட்டத்தை விவாதிப்பதற்கு எங்களுக்கு 48 மணி நேரம் அவகாசம்கூட இல்லாமல், எந்தவிதமான சிந்தனைக்கும் இட மில்லாமல் எப்படி சட்டத்தை விவாதித்து பாஸ் பண்ண முடியும்? அது கஷ்டம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை கூட்டுறவுத் துறை சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டு இரண்டு நாட்கள் கழித்து எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி தங்களும் ஏற்றுக் கொண்டு இரண்டு நாட்கள் கழித்து விவாதத்திற்கு தாங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். எனவே கொஞ்சம் அவகாசம் கொடுத்து விட்டால் நாங்கள் படித்துவிட்டு பேசுவதற்குப் பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; படிப்பது, பேசுவது ஆகிய அந்த இரண்டு உரிமைகளையும் நான் பாதுகாக்கிறேன். அவ்வளவுதான். அந்த பில்லில் பேசுங்கள்,

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன்வடிவு அறி முகம் செய்யப்பெற்றிருக்கிறது.